## ஜனவரி – 10 – வியாழன்

**புனித வில்லியம்**

**“ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது: ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்.” லூக். 4:18**

### முதல் வாசகம் : 1 யோவான் 4 : 19 — 5 : 4

அன்பார்ந்தவர்களே கடவுளே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதரர் சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை. இயேசுதான் மெசியா என்று நம்புவோர் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். பெற்றவரிடம் அன்பு செலுத்துவோர் பிள்ளைகளிடமும் அன்பு செலுத்துவர். நாம் கடவுள்மீது அன்புகொண்டு அவர் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது, கடவுளின் பிள்ளைகள்மீதும் அன்பு கொள்கிறோம் என்பது நமக்குத் தெரியவரும். ஏனெனில் அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில்தான் கடவுள் அன்பு அடங்கியுள்ளது. அவர் கட்டளைகள் நமக்குச் சுமையாய் இருப்பதில்லை. ஏனெனில் கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும் உலகை வெல்லுவது நம் நம்பிக்கையே.

**பதில்பாடல் :** ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு
ஊழியம் செய்வார்கள்.

### நற்செய்தி : லூக்கா 4 : 14 - 22

அக்காலத்தில் இயேசு தூய ஆவியின் வல்லமை உடைய வராய்க் கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார். அவரைப் பற்றிய பேச்சு சுற்றுப்புறம் எங்கும் பரவியது. அவர் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்து வந்தார். எல்லாரும் அவரைப்பற்றிப் பெருமையாகப் பேசினர். இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தார். தமது வழக்கத்தின்படி ஓய்வுநாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். இறைவாக்கினர் எசாயாவின் சுருளேடு அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் அதைப் பிரித்தபோது கண்டபகுதியில் இவ்வாறு எழுதியிருந்தது. ”ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது் ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.” பின்னர் அந்த ஏட்டைச் சுருட்டி ஏவலரிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். தொழுகைக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்று நோக்கியிருந்தன. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, ”நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று” என்றார். அவர் வாயிலிருந்து வந்த அருள்மொழிகளைக் கேட்டு வியப்புற்று, ”இவர் யோசேப்பின் மகன் அல்லவா? ”எனக் கூறி எல்லாரும் அவரைப் பாராட்டினர்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைகள் நமக்குத் தூய ஆவியாரின் செயற்பாடுகளுக்கும், தீய ஆவியின் செய்றபாடுகளுக்குமிடையில் வேற்றுமையைக் கண்டறிய நமக்குத் துணைபுரிகின்றன. கபடனான சாத்தான் இறைமகன் இயேசுவைத் தன் சூழ்ச்சிவலைக்குள் விழச்செய்ய பற்பலவழிகளிலும் முயற்சி செய்து அது இயலாமற்போகவே, பல எதிர்க் கிறிஸ்துகளை இவ்வுலகில் உருவாக்கி, இறைமகன் இயேசுவின் பெயராலும்,, தூய ஆவியாரின் பெயராலும் பலரும் பல தப்பறையான போதனைகளையும், தவறான வழிகாட்டலிலும் மக்களைத் திணறடித்துக்கொண்டிருக்கிறான். இவ்வாறான சந்தர்ப்பங்கள் நம் விசுவாசத்சுக்குப் பெரும் சவாலாக மாறிவிடுகின்றன. *1யோவா. 4:1* “அன்பார்ந்தவர்களே, தூய ஆவியின் தூண்டுதல் தமக்கு இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் எல்லாரையுமே நம்பிவிடாதீர்கள்: அந்தத் தூண்டுதல் கடவுளிடமிருந்து வருகிறதா எனச் சோதித்தறியுங்கள்: ஏனெனில் போலி இறைவாக்கினர் பலர் உலகெங்கும் தோன்றியுள்ளனர்.” எனவே, நன்மை தீமையை இனம் காணவும், தூய ஆவினதும், தீய ஆவியினதும் செயற்பாடுகளை பிரித்தறியவும் இன்றைய இறைவார்த்தைகள் நமக்குத் தருகின்ற அளவுகோல் ‘அன்பு’ ஆகும். எவருடைய வார்த்தைகளில், செய்பாடுகளில் உண்மை அன்பு வெளிப்படவில்லையோ அவை எதுவும் கடவுளிடமிருந்து வருவதில்லை. கடவுளிடமிருந்து வருபவை எவையும் அன்பின் வெளிப்பாடின்றி அமைவதில்லை. எனவேதான் அருட்பொழிவு பெற்ற இறைமகன் “ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்” என அறிக்கையிடுகின்றார். இவைதான் தூயஆவியாரின் வழிகாட்டல். அதிகாரம் செய்வதும், அகம்பாவம் கொள்வதும், தான்தோறித் தனமான செயற்படும் எவரும் தம்மை ஆண்டவரின் அருட்பொழிவு பெற்றவர் என்றழைக்கத் தகுதியற்றவர்கள்.